## 135. மண்ணுக்காக மாணிக்கத்தை

### பல்லவி

மண்ணுக்காக மாணிக்கத்தை விட்டிடமாட்டேன்
மனிதனுக்காய் தேவனையே தள்ளிட மாட்டேன்

### அனுபல்லவி

மண்ணான மனிதன் நிலையற்றவன்
விண்ணான தேவன் நித்தியமானவர்

### சரணங்கள்

1. என் தூக்கத்திற்காய் காலை ஜெபத்தை
தள்ளிட மாட்டேன் - 2
மாம்சமானது பெலவீனமே
ஆவியானது உற்சாகமே

2. வேலைக்காக வேத வாசிப்பை
தள்ளிட மாட்டேன் - 2
கால்களுக்கு தீபமே
பாதைக்கு அது வெளிச்சமே

3. உறவினருக்காய் ஆராதனையை
தள்ளிட மாட்டேன் - 2
மாம்ச உறவுகள் மறந்திடுமே
ஆவியான தேவன் மறப்பாரோ

4. போதும் என்ற மனதுடன் திருப்தியாவேன்
தேவனுக்காய் பூமியிலே வாழ்ந்திடுவேன்
மண்ணான மனிதனே மனந்திரும்பு
மனம்போன வாழ்வை சீர்துக்கிடு